**செய்தி வெளியீடு எண்: 174** **நாள்: 27.02.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.2.2019) தலைமைச் செயலகத்தில், பொதுத் துறை சார்பில் புதுப்பிக்கப்பட்ட மழலையர் காப்பகத்தை, தலைமைச் செயலகப் பணியாளர்களின் குழந்தைகள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

சென்னை, தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் பணியாளர்களுடைய குழந்தைகளின் நலனுக்காக, தலைமைச் செயலக முதன்மைக் கட்டடத்தின் தரைத்தளத்தில் குழந்தைகள் காப்பகம் பல்லாண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இக்காப்பகத்தின் அடிப்படை வசதிகளையும், உள்கட்டமைப்பு வசதிகளையும் புதுப்பித்து மேம்பட்ட வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று தலைமைச் செயலகப் பணியாளர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கோரிக்கை வைத்திருந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், தலைமைச் செயலகப் பணியாளர்களின் கோரிக்கையை கனிவுடன் ஏற்று, குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள், சிறிய நூலகம், குழந்தைகள் எளிதாகப் பயன்படுத்துவதற்கேற்ற கழிவறைகள், போன்ற பல வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட நவீன மழலையர் காப்பகத்தை இன்று திறந்து வைத்தார்கள்.

இம்மழலையர் காப்பகத்தின் சிறப்பம்சமாக பெண் பணியாளர்கள் தங்களின் குழந்தைகளுக்குத் தனிமையில் பாலூட்டுவதற்கும், குழந்தைகள் படுத்துறங்குவதற்கும் தனியாக இடவசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், குழந்தைகளுக்கு நாள்தோறும் மூன்று வேளைகளிலும் சத்தான உணவு வகைகள் காப்பகத்தின் அருகிலேயே தயார் செய்து வழங்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தலைமைச் செயலகத்தின் ஒரு பகுதியிலேயே இக்காப்பகம் அமைந்திருப்பதால், இக்காப்பகத்திற்குத் தங்கள் குழந்தைகளை அனுப்பும் பணியாளர்கள் எந்தவிதமான கவலையோ, மன அழுத்தமோ இன்றி மகிழ்வுடனும், முழு ஈடுபாட்டுடனும் தங்கள் பணியைச் செவ்வனே செய்ய இயலும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார், மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் டாக்டர் வி.சரோஜா, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பொதுத்துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) முனைவர் பி.செந்தில் குமார், இ.ஆ.ப., பொதுத் துறை துணைச் செயலாளர் (மரபு) திரு.டி. மோகன், இ.ஆ.ப., தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத் தலைவர் திரு.செ. பீட்டர் அந்தோணிசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**